முருகப்பெருமான் துணை

**மகான் சந்திரபகவான் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.09.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. ஆற்றல்மிக்க ஞானவான் படைகளை
அகிலமெங்கிலும் படைக்க வேண்டி
மாற்றம்தனை உலகினில் செய்ய
மாதவசியாக வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது யாளி திங்கள்
வரங்களாக இருபானாற் திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 26 நாள், 11.09.2022 ஞாயிற்றுக்கிழமை)
வழங்குவேன் சந்திர பகவான் யானும்
3. யானும் அருளாசி தன்னை
உலகநலம் காண உரைப்பேன்
ஞானபலம் கொண்ட சமூகம்
ஞானியரின் உலகமக்கள் வந்தால்தான்
4. வந்தால் தான் தேற்றம் கூடி
வையகத்தில் வளர்ச்சி காணும்
சிந்தை தெளிவு சகலவளமும்கூடும்
சித்திகளும் தானாக வந்தடையும்
5. அடையவே மனித சக்திகளெல்லம்
ஆறுமுகனார் ஆசி அருள் பெற்ற
தடைவெல்லும் ஞானிகள் ஆகி
தரணியை மாற்றும் மேன்மை பெறுவர்
6. மேன்மையோடு முக்காலம் உணர்ந்த
முழுமைபெற்ற ஞானிகள் பூசை
நன்மைதரும் வண்ணம் இருக்க
ஞானதேசிகன் காட்டும் வழிகளை
7. வழிகளை நம்பி வருகவே
வக்கிர கொடூர சம்பவமில்லா
தெளிவான முடிவும் திடமான வகையும்
தேசிகன் வழி தரும சிந்தையும் கூடி
8. கூடியே உலகை வெல்லுகின்ற
குருவருள் பலம் மிகுதி கண்டு
நாடிடும் ஞானவான்கள் நிலை
ஞானிகளாகவும் ஆற்றல் பெருகி
9. பெருகியே அரங்கன்வழி வருகின்ற
பேருலக மக்கள் அனைவரும்
தருமம் காக்கின்றவர்களாகவும்
தரணியில் தரும ஞான ஆட்சியை

10. ஆட்சியை படைக்கும் வல்லவர்களாகவும்
அரங்க மகானால் உருவாக்கப்படுவர்
தட்டாது ஈகைத் திறன் கூடி
தாராள தேட்டு தன புழக்கமோடு
11. புழக்கமோடு சகலத் துறைகளிலும்
புகழ்கூடி உலகோர் சிறப்பர்
வழக்கங்கள் யாவும் ஞானவழியாகி
வரம்பல கிட்டி ஞானிகளாவர்
அருளாசி முற்றே

–சுபம்–